# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு
2015/2016 (ஆகஸ்ட் 2018)

**TL/S 3243 தெரிவு செய்யப்பட்ட பாடநூல்கள் - II**

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி – I இலிருந்து இரு வினாக்களையும் பகுதி – II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி – I

1. (அ) "பதினொரு ஈழத்துக் கவிஞர்கள்" கவிதைத் தொகுப்பில் இடம்பெறும் கவிஞர்களைத் தலைமுறை அடிப்படையில் வகைப்படுத்துக. (05 புள்ளிகள்)
   (ஆ) அவர்களுள் முதலாம், இரண்டாம் தலைமுறைக் கவிஞர்களின் கவிதைப் பண்புகளை விளக்குக. (15 புள்ளிகள்)

2. (அ) ஒப்பியல் ஆராய்ச்சியின் விஞ்ஞானப் பண்புகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (06 புள்ளிகள்)
   (ஆ) இவ்வாய்வு அணுகுமுறை மூலம் க. கைலாசபதி எவ்வெப் பொருண்மைகளை ஆராய்ந்துள்ளார் என்பதைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (14 புள்ளிகள்)

3. (அ) "மூன்றாம் உலகம்" என்ற தொடர் மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாது? (05 புள்ளிகள்)
   (ஆ) "மண்ணும் சொல்லும்" கவிதைத் தொகுதியை அடிப்படையாகக் கொண்டு, ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வு மூன்றாம் உலகக் கவிஞர்களால் வெளிப்படுத்தப்பட்டிருக்குமாற்றை உதாரணங்களுடன் விளக்குக. (15 புள்ளிகள்)

## பகுதி – II

4. கா. சிவத்தம்பியின் "இலக்கணமும் சமூக உறவுகளும்" என்ற நூலை அடிப்படையாகக் கொண்டு, சமூக உற்பத்தி உறவுகளுக்கும் வினைச் சொல்லின் அமைப்பு, வளர்ச்சி ஆகியவற்றுக்கும் உள்ள தொடர்பை உதாரணங்களுடன் விளக்குக. (20 புள்ளிகள்)

5. "பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளையின் கவிதைகள் சமூக சீர்திருத்த நோக்கையே அடிப்படையாகக் கொண்டுள்ளன" ஆராய்க. (20 புள்ளிகள்)

6. தமிழ் நாட்டில் பௌத்த மதத்தின் வருகை, வளர்ச்சி, மறைவு என்பன பற்றி மயிலை சீனி. வேங்கடசாமி முன்வைக்கும் கருத்துக்களை எடுத்துக்காட்டுக. (20 புள்ளிகள்)

7. க. கைலாசபதி, மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் கவிதா மேதாவிலாசத்தை வெளிப்படுத்தியிருக்குமாற்றை உதாரணங்களுடன் விளக்குக. (20 புள்ளிகள்)